THE COVAI MAIL
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER






SEARCH ...

# கே.எம்.சி.எச் மருத்துவமனையின் கோவை மாரத்தான் 2019

December 15, 2019 CovaiMail News 0




கே. எம். சி. எச் மருத்துவமனை சார்பில் கோவை மாரத்தான் 2019 புற்றுநோய் குணப்படுத்தக்கூடியது என்ற கருத்தை முன்னிறுத்தி கோவில் பாளையம் கே.எம்.சி.எச் மருத்துவமனையில் இருந்து அவினாசி கே.எம்.சி.எச் மருத்துவமனை வரை நடைபெற்றது.




FOLLOW ON FACEBOOK

STAY CONNECTED







25 ஆவது முறையாக நடைபெறும் இந்த மாரத்தானை சிறப்பு விருந்தினர் கோவை காவல் கண்காணிப்பாளர் சுஜித் குமார் மற்றும் கோவை கே.எம்.சி.எச் மருத்துவ மையத்தின் தலைவர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி, நிர்வாக இயக்குனர் அருண் பழனிசாமி ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர்.



3000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த மாரத்தானில் கே.எம்.சி.எச் மற்றும் என்.ஜி.பி குழுமத்தின் மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள், பள்ளி குழந்தைகள் என பல்வேறு பிரிவினர்கள் கலந்து கொண்டனர்.




இதில் பள்ளி குழந்தைகளுக்கு மட்டும் விளாங்குறிச்சி சாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. மற்றவர்களுக்குகோவில் பாளையம் கே.எம்.சி.எச் மருத்துவமனையில் இருந்து அவினாசி கே.எம்.சி.எச் மருத்துவமனை வரை நடைபெற்றது. இதன் மொத்த தொலைவு சுமார் 18 மீட்டர் தூரம் என்பது குறிப்பிடத்தக்கது.






« PREVIOUS
Police Commissioner briefs Ramakrishna Students about Kavalan SOS App

NEXT »
ஈசா பொறியியல் கல்லூரிமுன்னாள் மாணவர் சந்திப்பு

